பாலகுமாரன்

# அகல்யா



# அகல்யா

எஸ் என்ன வேணும் ? சிவசு கதவை அடைத்துக்கொண்டு நின்றான் .

நான் உங்க பள்ளிக்கூடத்துல படிக்கிற ரமணவோட அப்பா .

எஸ் என்ன ப்ராபளம்?

நீங்கதான் ப்ராபளம்.?

நாங்களா? என்ன சமாச்சாரம் ?

இப்போ மணி பதினொன்னேமுக்கால் . எங்க வீட்டுல ஒருத்தரும் தூங்கலை. தூங்க முடியலை . நாயா உழைச்சிட்டு வீட்டுக்கு வரேன் ஒரே கலாட்டா.

என்ன ஆச்சு சார் ? என்ன ப்ராபளம்?

நீங்கதான் சார் ப்ராபளம். உங்க பள்ளிக்கூடம் தான் ப்ராபளம். குழந்தையை ஏபி சி டி சொல்லிக் கொடுக்கத்தான் அனுப்பிச்சேன். கிட்ட இருக்கும் பள்ளிக்கூடம் போயிட்டு வரட்டும்னு சொன்னேன். அவனுக்கு நாளைக்கு உங்க பள்ளிக்கூடத்தில் பர்த்டே பார்ட்டியாமே?

ஆமா எல்லாக் குழந்தைக்கும் பர்த்டே ஸ்கூல் கொண்டாடும் . கேக் வெட்டும் மாலை போடும் சந்தோஷப்படுத்தும்.

உங்களை யார் கொண்டாடச் சொன்னா என் குழந்தைக்கு பர்த்டே ?

இதுல என்ன தவறு சார் இதுக்கு பத்து ரூபாய் முதல்லயே ஸ்கூல் சேர்ந்த அன்னிக்கே கலெக்ட் பண்ணிட்டோமே .

யாரை கேட்டு கலெக்ட் பண்ணினீங்க?

இதுக்கு யாரை கேட்கணும்? நீங்க உங்க குழந்தை பர்த்டேயை மறந்தாலும் ஸ்கூல் மறக்காது. ஜஸ்ட் என்கரேஜ் .

ஒரு எழவும் வேண்டாம் . எதுக்கு கேக் வெட்டுறது? மாலை போடுறது? யாரையும் கேட்காம பத்து ரூபாய் வாங்குறது காசு பிடுங்க இது ஒரு வழியா?

மிஸ்டர் உங்க பேர் என்ன ?

கே.குப்புசாமி

அகல்யா பின்னாலிருந்து பேசினாள்

மிஸ்டர் குப்புசாமி பத்து ரூபாய் பெற்றோர்கள் கொடுக்குறாங்க . பத்து ரூபாய் பள்ளிக்கூடம் போடுறது. இது காசு பிடுங்குற வேலையில்லை. உண்மையிலேயே எங்களுக்கு எக்ஸ்ட்ரா செலவு. ஜஸ்ட் என்கரேஜ்.

வேண்டாம் சார் படிப்பு சொல்லிக் கொடுங்கோ போறும். வீட்டுல வெச்சு படுக்க முடியலை. ஒரே ரகளை. நாளைக்கு பார்ட்டி நாளைக்கு பார்ட்டின்னு அழுகை. எதுக்கு இந்த அதிகப்பிரசங்கித்தனம்? கேக் வெட்டுறதும் மாலை போடுறதுக்கு சகிக்க முடியல என்னால. நானே உழைச்சிட்டு வரேன்.

இப்ப உங்க பிராப்லெம் என்ன?

தூங்கணும் , நாலு மணிநேரமாவது நிம்மதியா தூங்கணும். அடிச்சாலும் படியமாட்டேங்குறது. கத்தினாலும் கேட்கமாட்டேங்குறது? நாளைக்கு வேலைக்குப் போக வேண்டாமா நான்?

இப்படி இடம் கொடுத்து குட்டிச்சுவர் பண்ணவா பள்ளிக்கூடம் அனுப்புறோம்? சேர்ரதுக்கு முன்னாடி சமத்தா இருந்தான் புள்ளை. இங்க சேர்ந்ததுலேர்ந்து குட்டிச்சுவர் பண்ணிட்டேள். அப்பா அம்மான்னா ஒரு பயம் இருக்கும் குழந்தைக்கு.

சரி உங்க வீடு எங்க?

அடுத்த தெரு.

அகல்யா அப்பாகிட்ட சொல்லிட்டு வா. கதவை புட்டி சாவி எடுத்துக்க. வாங்க சார் போகலாம்.

எங்க ?

உங்க வீட்டுக்கு "

எதுக்கு ?

நாலு மணிநேரம் நீங்க நிம்மதியா தூங்க . நாளைக்கு வேலைக்கு போக. வா அகல்யா.

அதுக்கில்ல சார்,

நோ ரமணாவை நான் பார்க்கணும். சரக்கென்று சீரியபடி அகல்யா கதவை பூட்டி இழுத்துப் பார்த்து விட்டு சிவசுவுடன் நடந்தாள்.

ஓவென்று அழுகையோடு வாசல் குறட்டில் ரமணா அகல்யாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டான். கேவிக்கேவி அழுதான் . அகல்யாவுக்கு கண்ணில் அழுகை முட்டிற்று. முதுவை தடவி தலையை வருடி குழந்தையை சமாதானம் செய்தல்.

தோளில் போட்டு முதுகில் தட்டினாள்.கேவல் சின்னச் சின்னத்தை வெளிப்பட்டு அடங்கியது.

மிஸ்டர் குப்புசாமி குழந்தை இன்னைக்கு எங்களோட இருக்கட்டுமே?

சிவசு பேசினான்......

எதுக்கு வேண்டாமே? ரமணாவின் அம்மா ஓடிவந்தாள்.

இல்லை மிஸஸ் சகுந்தலா மறுபடி முழிச்சுக் கலாட்டா பண்ணினா காலையில கொண்டுவந்து விட்டுடறோம். அகல்யா குழைவை அனுமதி கேட்டாள்.

எனக்கும் உடம்பு சரியில்லை மாமனாருக்கும் ஜுரம்.

அதான் நான் எடுத்துட்டு போறேன் காலையில கொண்டுவந்து விடறேன்.

குழந்தை தோலை விட்டுப் பிரிந்து சிவசுவிடம் மாறியபோது மீண்டும் தலைதூக்கி கத்தினான் . சிவசுவின் முகம் பார்த்துவிட்டு தோளில் அழுந்திக் கொண்டான்.

விடுடி எங்கேயாவது போய் தூங்கட்டும்.

எதுக்குன்னா அவாளுக்கு சிரமம் .

பத்து ரூபா வாங்கினாளோன்னா படட்டும்

சிவசு அதிகமா பேசுறாரு இவரு

சும்மா இரு அகல்யா வேற ஏதோ கோபம் அவருக்கு

குழந்தையைப் படுக்கைக்கு நடுவே போட்டுவிட்டு இருவரும் படுத்துக்கொண்டார்கள். சிவசு ரமணாவின் நெற்றியில் முத்தமிட்டான். அகல்யா அவனையும் குழந்தையும் சேர்த்து அனைத்துக் கொண்டாள்.

அடேயப்பா என்ன கோவம் மனுஷனுக்கு.

ச்சு, பேசாதே அகல்யா குழந்தை முழிச்சுக்க போறான். தூங்கு பேசாம.

விடியும் பொழுதில் வாசலுக்கு வந்து புடவையை நீவி செருகிக்கொண்டு கொட்டாவியுடன் வாசலைத் திறக்கையில் .............